Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 07 | (23 - 09 - 1992) | புதன்கிழமை | ஓசை 218

## குழந்தைகளை தாக்கும் புதுவகை நோய் பரவுகிறது

குழந்தைகளிடையே பரவிவரும் புதியவகை நோயினால் அவர்களின் அவயவங்கள் செயலிழந்து போவதாக கொழும்பில் மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இநநோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் பத்து குழந்தைகள் கொழும்பு 'லேடி றிஜ் வே'' மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது பத்து வயது வரையான குழந்தைகளையே இந்நோய் தாக்குகிறது எனவும் ஆனால் இது போலியோ அல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது. மருத்துவ நிபுணர்களின் கருததுப்படி இப்புதிய மர்மமான நோய் வைரஸ் நுண்கிருமிகளினால் ஏற்படுவதாகவும் சுவாசம் மற்றும் வாய் [4ஆம் பக்கம் பார்க்க]

### வவுனியாவில் முக்கிய பாதுகாப்பு மாநாடு

# வடக்கு எல்லையில் இராணுவ வேலி

# குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடு

## தியாகி திலீபன் நினைவாக தொடர் உண்ணாவிரதங்கள்

[யாழ்ப்பாணம்]

தாயக விடுதலைப்போராட்டத்தில் தியாகமரணமடைந்த தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாடகளில் ஏழாவது நாளாக நேற்றுப தமிழீழப திலீபனுக்கு அஞ்சலி செலுததியது.

கடந்த ஒரு வாரமாக தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் தியாக தீபம் திலீபனுக்கு உளப் பூர்வமான அஞ்சலி நிகழ்ச்சிகள் தொடர்ந்துநடைபெற்று வருகின்றன.

தினமும் அஞ்சலி நிகழ்வுகளும், திலீபன் ஞாபகார்தத மாக நடைபெறும் சிரமதான நிகழ்ச்சிகளும் அதிகரித்து வருகின்றன. அத்துடன்திலீபனின் ஞாபகார்த்தமாக தமிழீழ விடுதலைப் போராட்டததில வளர்ச்சிப் போக்கையும், போராட்டத்தின் நிதர்சன நிகழ்வுகளையும் துல்லியமாக சித்திரிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளும் தினமும் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன.

திலீபனின் ஞாபகார்த்தமாக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் அடையாளஉண்ணாவிரத நிகழ்ச்சிகளில் மக்களுடன் அதிகளவான மாணவர்களும் நேற்று பங்கு பற்றினர். தியாகி திலீபன் உண்ணாவிரதப் இருந்து தியாக மரணமடைந்த இடமான நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில நடைபெற்றுவரும் அடையாள உண்ணாவிரத நிகழ்ச்சியில் அதிகளவு மக்கள் கலநது கொண்டனர். இவற்றைவிட நேற்றுமாலை குருநகர் தொடர்மாடி மைதானத்தில் 72 மணிநேர தொடர் உண்ணாவிரதத்தை ஏழு இளைஞர்கள் ஆரம்பித்தனர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள இளைஞர்களுக்கு ஆயுதம்

[வவுனியா]

வன்னிப் பிரதேசத்தின் எல்லை ஓரங்களில் குடியமர்த்தப்பட்ட சிங்களவருக்குப் பாதுகாப்பு வழங்க புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்ணா தெரிவித்தார். இத்திட்டத்தின் பிரகாரம் அமைககப்படவுள்ள இராணுவ வேலியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட கிராமவாசிகளான சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இப்பாதுகாப்புத் திட்டம் அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற முக்கிய பாதுகாப்பு மாநாட்டில் எடுக்கப்பட்டது.

வவுனியாவில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இராணுவப் பயிற்சி வழங்கி இவர்களை குடியேற்ற கிராம பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப் போவதாக சிறிலங்கா இராணுவ தளபதி சிசில் வைத்திய ரத்தினா தெரிவித்தார்.

கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா எல்லைப்புற கிராமங்களை பார்வையிட்ட பின்னர் இவ்வுயர்மட்ட மாநாடு கூட்டப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 200 சிங்கள இளைஞர்கள் யுவதிகளுக்கான பயிறசிகள் எதிர் வரு ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாவுள்ளதாகவும் இவர்களுடன் 300 இராணுவத்தினரும் இணைக்கப்பட்டு 500 சிங்கள குடும்பங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்களவர் குடியேற்றக் கிராமங்களுக்கான இராணுவத் தளபதயின் இப் பயணத்தின் போது வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா, வன்னி இராணுவத் தளபதி கேணல் தேரிநதகளுவகண, பிரிகேடியர் வஜித் விஜேரத்ன, கேணல் சரத் கருனாரத்ன, மேஜர் அபய வீரக்கோன் உட்பட பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் இப் பயணத்தில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் அமித சித்சிறி ரணவக்கவும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## தியாகி திலீபன் நினைவு இன்றையசிரமதானபணிகள்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம பெற்று வரும் சிரமதானப் பணிகளில் இன்று,

உடுவில் வட்டப்பிரிவில் விழிசிட்டி கிராமத்தில் சுகாதார வசதிகளும் துப்புரவு செய்யும் பணிகளும் மேறகொள்ளப்படவுளளன.

யாழ். வட்டப்பிரிவில் வண்

### தெற்கில் காணாமற் போனோர்

## மர்மமான இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனரா?

தெற்கில் காணாமல் போன பெருமளவு இளைஞர்கள் பெயர் குறிப்பிடபபடாத

துள்ளதாக மேற்படி காணாமல் போனோரின் பெற்றோர், குழந்தைகளை பிரதிநிதித்து

யப்பட்ட இளைஞர்களே இவ் விபரத்தை வெளியிட்டுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்படும்

### இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு;

## சிங்களவரை ஊக்குவிக்க கல்வித் தகைமை குறைப்பு

சிறிலங்கா இராணுவத்துக்கு

யும் இராணுவத்தில் சேர்ப்ப

நாட களில் ஏழ வது ந ளாக நேற்றுப தமிழீழப திலீபனுக்கு அஞ்சலி செலுததியது.

கட ந்த ஒரு வாரமாக தமிழீழத்தின பல்வேறு பகுதிகளிலும் தியாக தீபம் திலீபனுக்கு உளப் பூர்வமான அஞ்சலி நிகழ்ச்சிகள் தொடர்ந்துநடை பெற்று வருகின்றன.

தினமும் அஞ்சலி நிகழ்வுகளும், திலீபன் ஞாபகார்தத மாக நடைபெறும் சிரமதான போராட்டத்தின் நிதர்சன நிழ்வுகளையும் துல்லியமாக சித்திரிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளும திைமும் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன.

திலீபனின் ஞாபகார்த்தமாக குடாநாட டின பல்வேறு பகுதிகளிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் அடையாளஉண்ணாவிரத நிகழ்ச்சிகளில் மக்களுடன் அதிகளவான மாணவர் வீதியில நடபெற்றுவரும் அடையாள உண்ணாவிரத நிகழ்ச்சியில் அதிகளவு மக்கள் கலநது கொண்டனர். இவற்றைவிட நேற்றுமாலை குருநகர் தொடர்மாடி மைதானத்தில் 72 மணிநேர தொடர் உண்ணாவிரதத்தை ஏழு இளைஞர்கள் ஆரம்பித்தனர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இராணுவப் பயிற்சி வழங்கி இவர்களை குடியேற்ற கிராம பாது காப்பு பணிகளில் ஈடுபடுத்தப் போவதாக சிறிலங்கா இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்தினா தெரிவித்தார்.

கடந்த 19 ஆம் திகதி இடம் பெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா எல்லைப்புற கிராமங்களை பார்வையிட்ட பின்னர் இவ்வுயர் மட்ட மாநாடு கூட்டப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 200 சிங்கள இளைஞர்கள் யுவதிகளுக்கான பயிற்சிகள் எதிர் வரு ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாவுள்ளதாகவும் இவர்களுடன் 300 இராணுவத்தினரும் இணைக்கப்பட்டு 500 சிங்கள குடும்பங்களுக்கு பாது காப்பு வழங்கப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்களவர் குடியேற்றக் கிராமங்களுக்கான இராணுவத் தளபதயின் இப் பயணத்தின் போது வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் ஜெரிடி சில்வா, வன்னி இராணுவத் தளபதி கேணல் தேரிநதகளுவகண, பிரிகேடியர் வஜித் விஜேரத்ன, கேணல் சரத் கருனாரத்ன, மேஜர் அபய வீரக்கோன் உட்பட பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் இப் பயணத்தில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் அமித சித்சிறி ரணவக்கவும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## தியாகி திலீபன் நினைவு இன்றையசிரமதானபணிகள்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம் பெற்று வரும் சிரமதானப் பணிகளில் இன்று,

பண்டிதர் குடியிருப்பு மக்களால் பண்டிதர் குடியிருப்புப் பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

உடுவில் வட்டப்பிரிவில் விழிசிட்டி கிராமத்தில் சுகாதார வசதிகளும் துப்புரவு செய்யும் பணிகளும் மேறகொள்ளப்படவுள்ளன.

யாழ். வட்டப்பிரிவில் வண்ணார்பண்ணை மாவீ வீதியில் உள்ள வாய்க்கால் துப்புரவு செய்யப்படவுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தெற்கில் காணாமற் போனோர்

## மர்மமான இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனரா?

தெற்கில் காணாமல் போன பெருமளவு இளைஞர்கள் பெயர் குறிப்பிடபபடாத இடங்களில உள்ள இரகசிய முகாம்களில் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தமக்கு தகவல்கள்கிடைத்துள்ளதாக மேற்படி காணாமல் போனோரின் பெற்றோர், குழந்தைகளை பிரதிநிதித்துவப்படுததும் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்படி இரகசிய முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களே இவ் விபரத்தை வெளியிட்டுள்ளனர். அவர்கள் விடுவிக்கபபடும் பொழுது கண்கள் கட்டப்பட்ட பின்னர் வேறு இடங்களுக்கு கூட்டிச் செல்லப்பபட்டே

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு;

## சிங்களவரை ஊக்குவிக்க கல்வித் தகைமை குறைப்பு

சிறிலங்கா இராணுவத்துக்கு அதிகமாக ஆடகளைச் சேர்க்கும் நோக்கததுடன் குறைந்த கலவித் தராதரம் உள்ளவர்களும விண்ணப்பிக்கஅனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எட்டு அல்லது ஒன்பதாம் தரம் வரை படித்தவர்களும் இராணுவத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்களை அனுபபலாமென்று அரசு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜூலைமாதம் மூன்றாம வாரததில் இடம் பெற்ற நேர்முகத் தேர்வுக்கு அதிகமானோர் விண்ணபிக்காததால் அதிகமான இளைஞர்களைச் சேர்ககும் நோக்கததுடன், அரசு குறைந்த கல்வித தகைமையுளளவர்களையும் இராணுவத்தில் சேர்ப்பதென்ற இந்த முடிவை அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் புலிகள் தமது நடவடிக்கைகளை அதிகரித்ததன் விளைவாக இவ்வாண்டு ஜூலை மாதம் தொடங்கி சுமார் மூன்றுமாத காலத்தில் மட்டும் 300 க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளார்கள். 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையே மோதல்கள் புதிதாக ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்று வரை இராணுவத் துருப்புக்கள் சுமார் 3300 பேர் வரை உயிரிழந்துள்ளார்கள். 8000பேருக்குகாயமேற்பட்டது என தெரிவிக்கப்படுகிறது

# பண்ருட்டி, ராம்தாஸ் மீண்டும் கைது

# பிரிவினையை தூண்டியதாக குற்றச்சாட்டு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராம்தாஸ், அக்கட்சியைச் சேர்ந்த எம். எல் ஏ பண்ருட்டி ராமச்சந்திரன் உடபட நான்கு பேர் மீண்டும் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட டுள்ளனர்.

கடந்த வெள்ளி கிழமை அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்ட போது அவர்கள் மீது பதிவுசெய்யப்பட்ட அதே குற்றச் சாட்டுக்களின் கீழ் இவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், தெரிவிக்கப்படடது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று இவர்கள் நான்கு பேருக்கும் சென்னை பத்தாவது பெருநகர மஜிஸ்ரேட் பிறப்பித்த ஜாமீன் வீடுதலை உத்தரவு இப்போது ரத்துச் செய்யப்பட்டு புதிதாக பிறப்பிக்கப்பட்ட வாரண்டின் அடிப்படையில் இவர்கள் நேற்று முன்தினம் இரவு மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது சதி, தேசத் துரோகம், பிரிவினை வாத குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஜாமீனில் வெளிவர முடியாத கைது வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது

ராம்தாஸ் திண்டிவனத்திலுள்ள அவரது கிளினிகிலும், பண்ருட்டி ராமச்சந்திரனும் ஏனைய இருவரும் சென்னையிலும் கைது செய்யப்பட்டனர்.

## ராம்தாஸ் கைதின் எதிரொலி கலவரங்கள் மூண்டன

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் சும், முன்னாள் மாநில அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனும் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டதையடுத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமையைப் பேண ராணுவத்திற்குப் பணிப்பாம்

[கொழும்பு]

கைது செய்து தடுப்புமுகாம்களில் தடுத்து வைத்திருப்பவர்களின் மனித உரிமைகளை மீறாமல் நடந்து கொள்ளுமாறு இராணுவத்தினருககுப் பணிக்கப்பட்டுள்ளதாகததெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பணிப்புரை இராணுவ உயர் பீடத்தினால் இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

விசேட இணைப்பு

தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் மூவர்ணப் படம் நாளைய ஈழநாதம் பத்திரிகையுடன் விசேட இணைப்பாக வெளிவருகிறது

## இன்றும் ஒப்பந்தம் செல்லுபடியானதே - இந்தியத்தூதுவர்

(கொழும்பு)

1987 இல் செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமும், அத்துடன் சபபந்தப்படடவையும் தொடர்ந்தும் செல்லுபடியானவையாகவே இருந்து வருகிறது இவ்வாறு இந்தியத் தூதுவர் ந கேந்திரநாத் ஜா ஆங்கிலப் பத்திரிகையொன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்-

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதா? இல்லையா? என்பது சிறிலங்கா அரசு முடிவு செய்ய வேண்டிய விடயமாகும். அனால் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக் கட்டமைப்புக்குள் ஒரு தீர்வைக் காண வேண்டும் என்பதே எமது கருத்து.

தமிழரின் நியாயபூர்வமான நலன்களை அங்கீகரிக்கும் ஒரு தீர்வுக்குக் கடப்பாடு உள்ளதாகவே இந்தியா இன்னும் இருந்து வருகிறது.

## விசாரணை ஆரம்பம்

[கொழும்பு]

கொக்கடடிச்சோலைப் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட இருபது இராணுவத்தினர் தொடர்பான விசாரணை நேற்று இராணுவ நீதிமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளது. பிரிகேடியர் தரததில் உள்ள ஓர் அதிகாரி இந்த விசாரணையை நடத்தவுள்ளார்.


ஜூன் 12 ஆம் திகதி இடம் பெறற இப்படுகொலைச் சம்பவத்தில் 67 அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டனர்.

## இராணுவ உளவாளிகளால் 2 தமிழர் கைதாகினர்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவ உளவாளிகளினால் வவுனியா நகரப் பகுதியில் வைத்து இரண்டு தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். பாவற்குளம் ஆறாம் படிவத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரும் வவுனியா நகரை நோக்கிச் சென்றபோது பிறவுண் அன் கொம்பனி இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)



08.08.1992 அன்று ஊர்காவற்றுறையில் லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ண மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவத்தில் கண்ணி வெடியில் சிக்கிய ஜீப்வண்டியின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.

நீர் இன்றேல் வளம் ஏது?

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5070)

### முக்கிய அறிவித்தல்

நீங்கள் பழுதுபார்ப்பதற்காகக் கொடுத்த உங்கள் பொருள்களை செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் எடுக்காவிடின் அப்பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. பற்றுச்சீட்டு இல்லாமல் பொருள் பெறமுடியாது. ஜீவிதா தொழில் நுட்பக் கூடம் ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். (சி/ 5082)

### வெளிவந்துவிட்டது

'கோப்பாய் - சிவம்' எழுதிய புதிய சிறுவர் பாடல்கள் - ''ரோஜாப் பூ'' மற்றும் பூந்தோட்டம், நொடியும் விடையும், பொறுக்கிய முத்துக்கள் ஆகிய நூல்கள் எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். (3199)

### கலர்ப் புகைப்படங்கள்

எங்கள் ஸ்ரூடியோவில் யாழ் பட்டமளிப்பு விழாக் கலர்ப் படங்கள் எடுத்தவர்களின் படங்கள் தயாராக வுள்ளன. அவற்றை எடுத்துச் செல்லும்படி அன்புடன் கேட்கின்றோம். ஞானம்ஸ் ஸ்ரூடியோ. (சி/5095)


## ஓவியக் கருத்தரங்கு

''இலகுவாகச் சித்திரம் வரைதல்'' பற்றிய விளக்கக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 4.30 மணியளவில் நாயன் மார்கட்டு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. ஞானதேசிகன் அவர்கள் இவ் விளக்க உரையை நிகழ்த்துவார், இதற்கு முன்னதாக இந்நிலையத்தைச் சேர்ந்த மாவீரர் அன்பு, மரதன் ஓட்ட வீரர் காண்டீபன் ஆகியோரின் உருவப் படத் திறப்புவிழா நடை

## ஆண்டு 9 வரலாற்றுநூல் திங்கள் வெளியிடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

ஆண்டு -9 மாணவர்களுக்கான வரலாற்று நூல் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் காலை10-00மணிக்குயாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்நூலை யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் வெளியிட்டு வைக்க இதன் முதல் பிரதியை பல்கலைப்புலவர் க. சி குலரத்தினம் பெற்றுக்கொண்டார்.

இந்நூலின் வெளியீட்டுரையை தமிழீழ விடுதலைப் புலிகள் கல்விப்பிரிவு பொறுப்பாளர் திரு. வி. இளங்குமரன் நிகழ்த்தினார் இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராசா கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

யாழ்- மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு. யோகி, யாழ்- பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி திரு. பொ பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். ''வரலாற்றுக் கடமை'' எனும் தலைப்பில் விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் உரை நிகழ்த்தினார்.

### ''வணிகத்தளிர்'' வெளியீட்டுவிழா

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம் (ஆங்கிலப் பாடசாலை) வர்த்தக மாணவர் மன்றம்தன் மூன்றாவது வணிகத்தளிர் சஞ்சிகையை இன்று புதன்கிழமை நண்பகல்12மணியளவில் வெளியிட உள்ளது.

இவ்விழாவில் உதவிக்கல்விப் பணிப்பாளர் [வர்த்தகம்] திரு. சி. சிவராசா அவர்கள் பிரதம விருந்தினராகவும் பல்கலைக் கழக விரிவுரையாளர் கே. கே. அருள்வேல் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் அவர்கள் வெளியீட்டுரையையும், யாழ் நகரக் கொத்தணி அதிபர் திரு நா க. சண்முகநாதபிள்ளை அவர்கள் ஆசியுரையையும் சிவதர்மவள்ளல் திரு க. கனகராசா அவர்கள் முதற் பிரதியைப் பெற்று விழாவைச் சிறப்பிப்பார்கள்.


G. A. Q. 1993/94

**பேராதனை** பல்கலைக்கழகம்

வெளிவாரி பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும்எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்:
**27-09-1992 8 மணி**

விண்ணப்பப்படிவம், நேர அட்டவணை போன்ற விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி
S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
(சி/5090)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



## 45ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**திருமதி சி. ஈஸ்வரி**

தோற்றம் 10-5-1966 | மறைவு 10-8-1992

கண்ணை இமை காப்பது போல்
கண் கலங்காமல் எமைக் காத்து
வளர்த்து விட்டு
சொல்லாமல் கொள்ளாமல் சென்றாயோ
அம்மா! அழுகின்றோம்

நாவற்குழி சந்தி, கைதடி (3264) திரு. கந்தன் சின்னத்துரையும், பிள்ளைகளும்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சவரிப்பிள்ளை யோகரத்தினம்**

தாய் மடியில் 16-2-1955 | தாயக மண்ணில் 28 9-1987

தம்பி யோகன்!
திலீபன் எரிந்து கொண்டிருக்கும் -
நிலை கண்டு அன்னியனுக் கெதிராக -
எழுந்த குரலில் நிமிர்ந்த குரலானாய்
அந்த ஊர்வலத்தில் உனை இழந்தோம்
உன் எண்ணம்
ஈடேறும் வண்ணம்—எழுவர்

## கந்தளம விருதி விவகாரம் பௌத்தபிக்கு கேள்வி

கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் 'குவின்ஹோட்டல்' அமைந்திருப்பது சரியானால் தம்புள்ள விகாரைக்கு முன்னால் கந்தளம ஹோட்டல் அமைப்பதில் என்ன தவறுள்ளது என வணக்கத்துக்குரிய பண்டித தெபக்கம நாவதெனி கேட்டுள்ளார்.

இதேசமயம் கந்தளம உல்லாச பயணிகள் ஹோட்டல் அமைக்கும் விவகாரம் பலத்த சர்ச்சையையும் எதிர்ப்பையும் தென்இலங்கையில் உருவாக்கி இருந்தமை தெரிந்ததே.

### தடுப்பூசி இல்லை

யாழ் போதனா வைத்திய சாலையில் இளம் பிள்ளை வாத (போலியோ) தடுப்பு மருந்து முடிவடைந்து விட்டதாகத் தெரியவருகின்றது.

இவ் விடயம் முற்கூட்டியே அறிவிக்கப்படாமையினால் பெருந்தொகையானோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 23

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இரகசியக் காவற்றுறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**பாண்டியன்** (முத்தன் நல்லதம்பி - தாழங்குடா - மட்டக்களப்பு)

1986ஆம்ஆண்டு திருக்கோணமலை - இறக்கக்கண்டியிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது கும்புறுப்பிட்டிப் பகுதியில் வைத்து வழிமடக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**ஐபா** (கும்புறுப்பிட்டி - திருக்கோணமலை)

1988 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**றொயிஸ்** (குகராசா சரவணபவான் - மூன்றாம் முறிப்பு - வவுனியா)

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**ரஞ்சன்** (க சத்தியசீலன் - வாழைச்சேனை - மட்டக்களப்பு)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் தலைகள் கொய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுப் பின் முண்டங்களாக மீட்கப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான -

**தர்மகுலேந்திரன்** (இயக்கச்சி - கிளிநொச்சி)
**நமசிவாயம் தெய்வேந்திரன்** (வேலணை)
**நாகநாதன் பாலேந்திரா** (இராசேந்திரா வீதி, யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - மியாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சோழன்** (ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய -

**மொசாட் / காந்தன்** (மகேந்திரராஜாஜெயகாந்தன் 2-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். கேணல் சந்திரன்** [இராமலிங்கம் முத்துலிங்கம் - 4-ம் வாய்க்கால், கிளிநொச்சி]
**மேஜர் வின்சன் / யப்பான்** (நவரத்தினம் வசந்தன் - நறுவிலடி, வல்வெட்டித்துறை, யாழ்.)
**மேஜர் அரவிந்தன்** [மட்டக்களப்பு]

(சி/5095)

## ஓவியக் கருத்தரங்கு

''இலகுவாகச் சித்திரம் வரைதல்'' பற்றிய விளக்கக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 4.30 மணியளவில் நாயன் மார்கட்டு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. ஞானதேசிகன் அவர்கள் இவ் விளக்க உரையை நிகழ்த்துவார், இதற்கு முன்னதாக இந்நிலையத்தைச் சேர்ந்த மாவீரர் அன்பு, மரதன் ஓட்ட வீரர் காண்டீபன் ஆகியோரின் உருவப் படத் திறப்புவிழா நடைபெறும்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
விஞ்ஞானபீடம்
இரண்டாம்
அரையாண்டு
பரீட்சை - 1991

இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 1992 ஆம்ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ம் திகதிமுதலாம் வருடப் பரீட்சையுடன் ஆரம்பமாக உள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 01. 10. 92 இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களைப் பரீட்சைக் கிளை உதவிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ x 10 செ. மீ அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

(சி, 5096)

27-09-1992 8 மணி

விண்ணப்பப்படிவம், நேர அட்டவணை போன்ற விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி
S. அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

(சி/5090)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## தியோனிஸ் அலக்சான்டர் சம்மாட்டியார்

[ பிரபல வர்த்தகரும் அலக்சான்டர் அன் சன்ஸ் உரிமையாளரும் ]

பலாலி வடக்கு, வசாவிளான்.

ஐயா என்றும் அப்பையா என்றும்
அனுதினமும் உன்னை அன்பொழுக அழைத்த நாம்
ஐயோ ஐயா எங்கே சென்றாய் என்று
கண்ணீரோடே கதறுகின்றோமே

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 22- 09- 92 செவ்வாயன்று பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவரின் பிரிவால் துயருறும் சகோதரர்: மரிசலீன், மாசலீன், கென்றி பிள்ளைகள்: வரிக்ரோறியாப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, பாக்கியநாதர், குணசீலியம்மா, பேரின்பநாதன். மருமக்கள்: சந்தியாப்பிள்ளை, திரேசம்மா, மேரியோசேப்பின், மோட்சலங்காரி, திரேசம்மா பேரப்பிள்ளைகள்: செபமாலையம்மா, ஞானமலர், செல்லப்பாக்கியம், செபஸ்ரியன் பெர்னான்டோ (இத்தாலி), மதுரநாயகம் (இத்தாலி), ஞானரட்ணம் (கனடா), யோகரட்ணம் (கனடா), ஜெனிற்றா, வசந்தரட்ணம், ஜீவரட்ணம், அரசரட்ணம், மெனிற்றா, றெஜி (இத்தாலி), றொகான், றதீஸ், கார்மேல் ஜெயராணி, பற்றிக் (சுவிஸ்), ஸ்ரனிஸ் (கனடா), அமலராணி, பப்ரிஸ்ற், திருஞானதீபன், விமலா, பெல்சியா, ஜெபநேசன், ஞானரூபன், இருதயறாஜ், பேரின்பறாஜ், ஜீவானந்தன், சிந்தியா, மேரி அஞ்சலா, றூபன், ஜெகன், றொஷான். பூட்டப்பிள்ளைகள்: யேசுதாஸ், மரியதாஸ், வசந்தகுமாரி, அமலதாஸ், சாந்தகுமாரி. அருள்தாஸ், அன்ரனி றொபின்சன், அன்ரனி நெல்சன், இருதயராணி, றெஜினோல்ட், அன்ரன் றாஜ்குமார், போல், யூலி.

(3254)



## சவரிப்பிள்ளை யோகரத்தினம்

| | |
|---|---|
| தாய் மடியில் | தாயக மண்ணில் |
| 16-2-1955 | 28 9-1987 |

தம்பி யோகன்!
திலீபன் எரிந்து கொண்டிருக்கும் -
நிலை கண்டு அன்னியனுக் கெதிராக -
எழுந்த குரலில் நிமிர்ந்த குரலானாய்
அந்த ஊர்வலத்தில் உனை இழந்தோம்
உன் எண்ணம்
ஈடேறும் வண்ணம்—எழுவர்
இம் மக்கள் மலரும் சுதந்திரம்.

இத்திக்கண்டல்,
அடம்பன்,
மன்னார்.

- குடும்பத்தினர்

(3263)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பத்மலோஜினி செல்வராஜா

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 18-09-1947 | 24 08-1992 |

காலமெல்லாம் எம்மைக் காத்துவிட்டு - இன்று
காலனவன் காலடியே தஞ்சமெனச் சென்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டிநிற்கும்

ஆறுமுகம் குடும்பத்தினர்.

வரணி வடக்கு,
வரணி.

கண்டாவளை

(3261)

நாகநாதன் பாலேந்திரா (இராசேந்திரம் வீதி, யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - மியாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சோழன் (ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய -

மொசாட் / காந்தன் (மகேந்திரராஜாஜெயகாந்தன் 2-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். கேணல் சந்திரன் [இராமலிங்கம் முத்துலிங்கம் - 4-ம் வாய்க்கால், கிளிநொச்சி]

மேஜர் வின்சன் / யப்பான் (நவரத்தினம் வசந்தன் - நறுவிலடி, வல்வெட்டித்துறை, யாழ்.)

மேஜர் அரவிந்தன் [மட்டக்களப்பு]

கப்டன் நிவாஸ் (மட்டக்களப்பு)

நுட்வின்

நரேன் (இரட்ணசிங்கம் தங்கராசா - இன்பருட்டி, அல்வாய் வடக்கு, பருத்தித்துறை, யாழ்.)

ரமணிதரன் (மட்டக்களப்பு)

அலிஸ்

சைமன்

கோமேஸ்

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

பவான் (இ இராசகுமார் - கரவெட்டி, யாழ்.)

அம்பாறை - திருக்கோயில் முகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்து சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்கினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி - 02, ஐயங்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழிளைஞர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். விவேக் (மார்க்கண்டு மகேந்திரன் - கரவெட்டி மத்தி, யாழ்ப்பாணம்)

2-ம் லெப். ரூபி (செல்வராணி (செல்வி) தம்பையா நாவற்காடு, கரம்பைக்குறிச்சி, வரணி, யாழ்).

2-ம் லெப். மனோஜ் (இரத்தினம் சிவகுமார் - பன்றிக்கெய்தகுளம், ஓமந்தை, வவுனியா)

2-ம் லெப். றெஜினோல்ட் (இராமலிங்கம் பத்மராசா - குமரபுரம், பரந்தன், கிளிநொச்சி)

ரஜிந்தன் (ஆறுமுகம் செல்வரட்ணம் - வட்டுவாகல், முல்லைத்தீவு)

கப்டன் குபேரன் (இராமச்சந்திரன் தர்மராஜா - விநாயகபுரம், துணுக்காய், மாங்குளம், முல்லைத்தீவு)

மலேசிமன் (இராசேந்திரம் திவாகரன் - மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி/5094)

### சிந்தனைக்கு

உலகின் ஒரு பாதி உலகின் மறுபாதியின் துயரங்களைப் புரிந்து கொள்ளாது.

— ஜேன் ஆஸ்ட்டன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி. யாழ்ப்பாணம் 23 - 09 - 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## ஆயுதக் கட்டுப்பாடும் மூன்றாம் உலகும்

கிழக்கு ஐரோப்பிய நாடு ஒன்றிடமிருந்து 100 மில். அமெரிக்க டாலர் (450கோடி ரூபா) பெறுமதியான ஆயுதங்களை சிறிலங்கா அரசு கொள்வனவு செய்யவுள்ளதாக தெரியவருகின்றது. இவ் ஆயுதங்களில் டாங்கிகள், ஹெலிகொப்டர்கள், பீரங்கிகள், அதிவேகப்படகுகள் என்பன அடங்குகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு, இவ் ஆயுத விநியோகத்தைமேற்கொள்ளவிருக்கும் நாடு ஐந்து வருடக்கடன் சலுகை அளிக்கவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

''ஆயுதப் போட்டியைத் தவிர்த்தல்'' “உலக சமாதானத்திற்கு வழிவகைகள் செய்தல்” என்ற நோக்கத்திற்காக 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நேட்டோ அமைப்பும், அன்றைய வார்சோ அமைப்பும் மரபு வழி ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இணங்கிக் கொண்டன. இதன் பிரகாரம் இவ் இரு அமைப்பு நாடுகளிடமும் மேலதிகமாக இருந்த மரபு வழி ஆயுதங்கள் குறைக்கப்படுவதென ஒப்பந்தம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

ஆனால், இந்நோக்கங்கள் இன்று நடைமுறையில் கேள்விக்குரியவையாகவும், தப்பான விளக்கம்கற்பிக்கப் படுபவையாகவும் இருப்பதோடு ஆயுதப் போட்டியைத் தவிர்த்தல் உலக சமாதானத்திற்கு வழி வகுத்தல் என்பனவற்றின் முரண்பாடான விளைவைக் கொண்டவையாகவும் உள்ளன.

இவ் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ஆயுதப் போட்டியை கட்டுப்பண்ணுதல் என்பது அழித்தல் என்ற அர்த்தப்படாமல்குறைத்தல் என்பதுடனேயே நின்று போயுள்ளது. அதாவது ஒப்பந்த சரத்திலிருந்த ஓட்டைகள் ஊடாக தம்மிடமிருந்த மேலதிகமான ஆயுத தளபாடங்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு இந்நாடுகள் மலிவுவிலையில் விற்பனை செய்யத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான விற்பனவால், பிராந்தியப் போட்டிகளிலும், உள் நாட்டுச்சண்டைகளிலும்ஈடுபட்டுள்ள மூன்றாம் உலக நாடுகள் பெருமளவு ஆயுதங்களை வாங்கிக்குவிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், சிறிலங்கா போன்ற நாடுகள் பெரும் நன்மையை அடைந்துள்ளன அதாவது, உலகின் கெடுபிடி போர் நிலவியகாலத்தில் பெரியஆயுத சந்தையாகஇருந்த

# உட்கார்ந்து பேசுகிறார்கள் உருப்படியாக சாதிக்கவில்லை

### - தெரிவுக்குழு குறித்து குமார்

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக் குழு இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத்திட்டத்தை தரப்போவதில்லை என்று குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர் மேலும் கூறுகையில், இதற்காக தெரிவுக்குழுவின் தலைவரைக் குறை கூறமுடியாது ஆனால் இந்த முழு வழிமுறையுமே ஒரு தொடக்கப் புள்ளியல்ல. அவர்கள் சில காலமாக உட்கார்ந்து பேசுகிறார்கள் தான். ஆனால் எதையும் உருப்படியாக சாதித்துவிடவில்லை. ஒவ்வொரு முறையும் கூடியபின்னர் பிரியும்போது மீண்டும் சந்திப்பதற்கான திகதியை மாதக்கணக்கில் அல்லது வாரக்கணக்கில் பின்போடுகின்றனர் ஆனால் எடுத்துக் கொண்ட விடயம் பற்றி ஒரு முடிவுக்கும் வருவதில்லை என்று குறிப்பிட்டார்

## ஆண்டு 9 மாணவருக்கான தொழில் நுட்ப பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சை எதிர் வரும் டிசம்பர் மாதம் யாழ். மாவட்டத்தில் நடைபெறும் என கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஆண்டு 9 மாணவர்களுக்கான மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் கல்விப் பணிப்பாளரால் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன. அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் தத்தமது பிரிவு கோட்டக் கல்வி அதிகாரிகளிடம் மேற்படி விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து அடுத்த மாதம் 10-ம் திகதிக்கு முன் மீளக் கையளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை கடந்த வருடம் மேற்படி பரீட்சை இங்கு நடைபெறாததால் தற்போது ஆண்டு 10இல் உள்ள மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மேற்படி பரீட்சையின் போது டிசம்பர் மாதம் இம்மாணவர்களுக்கும் மேற்படி பரீட்சை விசேட பரீட்சையாக யாழ். மாவட்டத்தில் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ச, பா)

மண்முனை மக்களுக்கு

## நிவாரணம் வழங்குவதில் அரசாங்கம் அசிரத்தை

(மண்டூர்)

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த கால அசம்பாவிதங்களினால் கொல்லப்பட்ட 326 பேரினதும் குடும்பங்களுக்கு நஷ்டஈடு கோரி விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அதில் 22 பேரின் குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை நஷ்டஈடாக ஓர் இலட்சத்து முப்பத்தியிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊனமுற்றோருக்கான நஷ்டஈட்டுக்கு 125 பேர் விண்ணப்பித்துள்ள போதிலும் இரண்டு பேருக்கு மட்டுமே நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பன்னிரண்டு அகதி முகாம்களில் 1429 குடும்பங்களைச் சேர்ந்த 5587 பேர் அகதிகளாக உள்ளனர் உறவினர் வீடுகளில் 2310 குடும்பங்களைச் சேர்ந்த 9280 பேர் உள்ளனர்.

## கிராம சேவகருக்கு சீருடை

(யாழ்ப்பாணம்)

சகல கிராம சேவையாளர்களும் இனிமேல் சீருடை அணிந்தே பணிபுரியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான சீருடைத்துணிகள் சகல மாவட்ட செயலகங்களுக்கும் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி யாழ் மாவட்டத்தில் பணிபுரியும் கிராமசேவையாளர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் சீருடைத்துணிகள் யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இளமஞ்சள் நிறத்தையுடைய இத்துணிகளால் சேட்டும் நீளக்காற்சட்டையும் தைத்து அணியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (42) (பா)

## தபால்களை பெறவும்

குமணவில் எடுத்துவரப்பட்ட தபால்களில் வலி வடக்கு, வலிமேற்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கான உள்நாட்டு வெளிநாட்டுத் தபால்கள் தபாற்கந்தோரில் தேங்கிக் கிடக்கின்றன.

அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் பிற இடங்களிலும் செயற்பட்டுவரும் தபாற் கந்தோர்களில் இவை தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தபால்களை வலி மேற்குப்பகுதி, வலி வடக்குப் பகுதி மக்கள் வேறு பகுதிகளில் செயற்பட்டு வரும் அத் தபாலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (42)

### டிப்புளோமா நேர்முகப் பரீட்சை

யாழ். பல்கலைக் கழகப் பட்டப் பின் கல்வி டிப்புளோமா (1991-92) பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்குரிய நேர்முகப்பரீட்சை அக்டோபர் மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறுமென யாழ். பல்கலைக்கழகபதிவாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

### விசர் நாய் தடுப்பூசி

வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் நோய்த் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆறாம் சுற்றில் இன்று முற்பகல் 8. 30 மணி தொடக்கம் பிற்பகல் 12. 30 மணி வரை பழம் வீதி - உடையார் வீதிச் சந்தியிலும், ஆடியபாதம் வீதி- செல்லர் வீதி சந்தியிலும், பிற்பகல் 2. 00 மணிமுதல் 4. 00 மணி வரை கோவில்வீதி- சங்கிலியன்வீதிச் சந்தியிலும், செட்டித்தெரு- கோவில் ஒழுங்கைச் சந்தியிலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் என யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## யார் நம்பப் போறார்?

என் இனிய தோழா திலீபா !
நண்பன் பிதற்றுகிறான்
திலீபன் செத்திப்போ
ஐந்தாண்டு ஆனதென்று
நீ செத்தது என்று சொன்னால்
யார் நம்பப் போறார் ?

குடா நாட்டுப் பூமியிலே
உன் கால் பதியா ஊர்தான் உண்டா ?
ஐந்தாண்டு போனதனால் அங்கெல்லாம்
உன் நினைவு செத்தா போச்சு ?
நேர்மையும் துணிவும் பெற்று
நீ சென்ற பயணம்
தொடர்ந்து, நடை போடுகையில்
நீ செத்தது என்று சொன்னால்
யார் நம்பப் போறார்.

நீ சிந்திவிட்ட வார்த்தைகள்
உரைத்து விட்ட வாசகங்கள்
வாழ்விழந்து போகவில்லை
உன் கொள்கைகள், இலட்சியங்கள்
உருக்குலைந்து போகவில்லை.

உன் மீது மக்கள் கொண்ட
பாசமும் பற்றும் பொய்யில்லை
அவர்கள் இதயங்களில் நீ ஏற்றி
வைத்த உணர்ச்சிகளும் எழுச்சிகளும்
அணைந்து போய் விடவில்லை.

கோட்டையிலே கொடி பறக்க - நீ
கண்ட கனவு நனவாகிப் போகையிலே
எதிரிகளும் தங்கள் இதயங்களில்
மதிப்பு உனக்கு அளிக்கையிலே
குளிர் மலர்ச் சோலைக் குயில் உந்தன்
குரல் எழுப்பி விட்ட கோசங்கள்
பட்டி தொட்டி எங்கும் படியேறி
எதிரொலித்து நிற்கையிலே
நீ செத்து, ஐந்தாண்டு ஆனதென்றால்
யார் நம்பப் போறார்?

சி. பாவரசன்

## திலீபன் ஒன்பதாம் நாள் 23. 9. 92

உதடசைய - - - விழியசைய . . ஓசை வரவில்லை
உடல் முழுதும் சுருங்கியதால் சக்தி வரவில்லை!
பாதகரின் *தூதுவன்... வந்தும் பயனில்லை;
வேதனைக்கு இன்று மொரு விடிவுவர வில்லை

தென்றலித மோடுவந்து சுகமளிக்க வில்லை;
தேன்குயிலும் மகிழ்ந்தின்று பாட்டிசைக்க வில்லை!
வான் முகட்டில் மேகமது அணியயில வில்லை;
தேன்மலரும் மலர்ந்தின்று மணம் பரப்பவில்லை!

நாயகனின் உடல் தளர்ந்து நாடியது வீழ ...
பாயுமொளிச் சூரியனும் கிழக்கில் எழவில்லை;
தேயுமிளம் பிறைகூடத் தேடிவரவில்லை;
தென்னைபனை மாகூட அசைவுதர வில்லை!

பிள்ளைகள்... நின்றழப் பெண்டிர் குலுங்கியழ . .
தள்ளாடும் வயதுத் தாத்தாவும் கதறியழ . .
துள்ளும் இளவயதோர் துவண்டு அழ- எங்கும்
வெள்ள மெனக் கண்ணீர் வடிந்ததம்மா!

கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன்

* (தூதுவன்- திரு. ஜே. என். டிக்சிற்)

கப் படுபவையாகவும் இருப்பதோடு ஆயுதப் போட்டியைத் தவிர்த்தல் உலக சமாதானத்திற்கு வழி வகுத்தல் என்பனவற்றின் முரண்பாடான விளைவைக் கொண்டவையாகவும் உள்ளன.

இவ் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ஆயுதப் போட்டியை கட்டுப்பண்ணுதல் என்பது அழித்தல் என்ற அர்த்தப்படாமல்குறைத்தல் என்பதுடனேயே நின்று போயுள்ளது. அதாவது ஒப்பந்த சரத்திலிருந்த ஓட்டைகள் ஊடாக தம்மிடமிருந்த மேலதிகமான ஆயுத தளபாடங்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு இந்நாடுகள் மலிவுவிலையில் விற்பனை செய்யத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான விற்பனவால்,பிராந்தியப் போட்டிகளிலும்,உள் நாட்டுச்சண்டைகளிலும்ஈடுபட்டுள்ள மூன்றாம் உலக நாடுகள் பெருமளவு ஆயுதங்களை வாங்கிக்குவிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், சிறிலங்கா போன்ற நாடுகள் பெரும் நன்மையை அடைந்துள்ளன அதாவது,உலகின் கெடுபிடி போர் நிலவியகாலத்தில் பெரியஆயுத சந்தையாகஇருந்த மூன்றாம் உலகம் தற்பொழுதும் பெரிய ஆயுத சந்தையாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. ஆனால், சற்று மலிவு விலையில் கிடைக்க வாய்ப்பு இருப்பதினால், முன்னரை விட தரத்தில் கூடியதும் எண்ணிக்கையில் அதிகமாகவும் ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக்கள் இந் நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மேற்குலகமும் தனது ஆயுத வியாபாரத்தைக் குறைத்ததாக இல்லை. உலக சமாதானம், ஆயுதக் கட்டுப்பாடு என்பன பற்றிப் பெரிதாகப் பேசிவரும் அமெரிக்கா அண்மையில் சீனாவின் கடும் ஆட்சேபத்தையும், உலக ஆயுத பரிகரண ஒப்பந்தத்திற்குப் பங்கம் விளைவிக்கும் என்ற எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் எப்-16 ரகப் போர் விமானங்கள் 150 ஐ தைவானுக்கு விற்க முடிவு செய்துள்ளது. இதேபோன்று இஸ்ரேலின் முணுமுணுப்பையும் பொருட்படுத்தாது அதே ரகப் போர் விமானங்கள் 75ஐ சவுதிக்கு விற்பனை செய்ய முற்பட்டுள்ளது.

அதாவது உலக சமாதானம், அமைதி என்பவற்றிற்காக ஆயுதப் பரிகரண ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டதாகக் கூறிக் கொள்ளும் நேட்டோ நாடுகளும், முன்னைய வார்சோ அமைப்பு நாடுகளும் எந்தளவிற்குத் தமது கூற்றுக்கு விசுவாசமாக இருந்துள்ளன என்பதே இன்றுள்ள கேள்வி.

அத்தோடு, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் மேற்குலக நாடுகளிடமும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடமும் ஆயுதங்கள் கொட்டிக் கிடந்தனவே ஒழிய, போர்கள் அங்கு நடக்கவில்லை. மூன்றாம் உலக நாடுகளிலேயே உள்ளும், வெளியும் போர்கள் நடந்தன. அமைதியும், சமாதானமும் இந்நாடுகளுக்கே தேவையாகவும் இருந்தன.

இந்நிலையில் நேட்டோவும், முன்னைய வார்சோ அமைப்பும் செய்து கொண்ட ஆயுத பரிகரண ஒப்பந்தங்கள் ஐரோப்பாவினதும் அமெரிக்காவினதும் அமைதியையும், சமாதானத்தையும் முன்பிருந்ததை விட மேலும் உறுதிப்படுத்தச் செய்யப்பட்டதே ஒழிய உலக சமாதானத்தைக் கருத்திற் கொண்டு செய்யப்பட்டவையல்ல ஏனெனில் இவ் ஒப்பந்தத்தின் விளைவு முன்னரே மோசமாகியிருந்த மூன்றாம் உலகின் அமைதியை மேலும் கேள்விக்குரியதாக்கியுள்ளது.

தும் குடும்பங்களுக்கு நஷ்டஈடு கோரி விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அதில் 22 பேரின் குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை நஷ்டஈடாக ஓர் இலட்சத்து முப்பத்தியிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பன்னிரண்டு அகதி முகாம்களில் 1429 குடும்பங்களைச் சேர்ந்த 5587 பேர் அகதிகளாக உள்ளனர் உறவினர் வீடுகளில் 2310 குடும்பங்களைச் சேர்ந்த 9280 பேர் உள்ளனர்.

## கிராம சேவகருக்கு சீருடை

(யாழ்ப்பாணம்)

சகல கிராம சேவையாளர்களும் இனிமேல் சீருடை அணிந்தே பணிபுரியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான சீருடைத்துணிகள் சகல மாவட்ட செயலகங்களுக்கும் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி யாழ் மாவட்டத்தில் பணிபுரியும் கிராமசேவையாளர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் சீருடைத்துணிகள் யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இளமஞ்சள் நிறத்தையுடைய இத்துணிகளால் சேட்டும் நீளக்காற்சட்டையும் தைத்து அணியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (42) (பா)

சைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

### விசர்நாய் தடுப்பூசி

வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் நோய்த் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆறாம் சுற்றில் இன்று முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை பழம் வீதி - உடையார் வீதிச் சந்தியிலும், ஆடிய பாதம் வீதி- செல்லர் வீதி சந்தியிலும், பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை கோவில்வீதி- சங்கிலியன்வீதிச் சந்தியிலும், செட்டித்தெரு- கோவில் ஒழுங்கைச் சந்தியிலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் என யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

உதடசைய - - - விழியசைய . . ஓசை வரவில்லை
உடல் முழுதும் சுருங்கியதால் சக்தி வரவில்லை!
பாதகரின் *தூதுவன்... வந்தும் பயனில்லை;
வேதனைக்கு இன்று மொரு விடிவுவர வில்லை

தென்றலித மோடுவந்து சுகமளிக்க வில்லை;
தேன்குயிலும் மகிழ்ந்தின்று பாட்டிசைக்க வில்லை!
வான் முகட்டில் மேகமது அணியயில வில்லை;
தேன்மலரும் மலர்ந்தின்று மணம் பரப்பவில்லை!

நாயகனின் உடல் தளர்ந்து நாடியது வீழ ...
பாயுமொளிச் சூரியனும் கிழக்கில் எழவில்லை;
தேயுமிளம் பிறைகூடத் தேடிவரவில்லை;
தென்னைபனை மாகூட அசைவுதர வில்லை!

பிள்ளைகள்... நின்றழப் பெண்டிர் குலுங்கியழ . .
தள்ளாடும் வயதுத் தாத்தாவும் கதறியழ . .
துள்ளும் இளவயதோர் துவண்டு அழ- எங்கும்
வெள்ள மெனக் கண்ணீர் வடிந்ததம்மா!

கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன்
* (தூதுவன்- திரு. ஜே. என். டிக்சிற்)

## தீவிரவாதிகள் மீண்டும் உயிர் பெற்றுள்ளார்கள்

**- வாழப்பாடி**

ராஜீவ் காந்தியின் கொலைக்கு காரணமானவர்களை சில கட்சிகளும் அமைப்புகளும் ஆதரித்துப் பேசுவதன் காரணமாகவே தமிழகத்தில் தீவிரவாதிகள் மீண்டும் உயிர் பெற்று நடமாட ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்

சென்னையில் கடந்த ஞாயிறு இவர் விடுத்துள்ள அறிக்கையில் தமிழகத்தில் தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி, திராவிடர் கழகம் போன்ற கட்சிகளும் மற்ற சில அமைப்புகளும் தீவிரவாதிகளுக்கு பகிரங்கமாக ஆதரவு அளித்து வருவதாக குற்றஞ்சாட்டினார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் அரசியல்கட்சிகளை தடைசெய்யவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் மீதுகடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ராமமூர்த்தி கேட்டுக்கொண்டார்.

## சதாமின் மாளிகை 79நாளில் கட்டப்பட்டது

(பக்தாத்)

பொறியியலாளர்களும், கட்டடப் பணியாளர்களும் இணைந்து இருபத்திநான்கு மணி நேரமும் தீவிரமாக உழைத்ததன் பயனாக எழுபத்தொன்பது நாட்களில் ஈராக் அதிபரின் மாளிகை மீண்டும் கட்டப்பட்டது என உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

வளைகுடாப் போரின்போது குண்டுவீச்சினால் நாசமாக்கப்பட்ட மேற்படி மாளிகை விசேடமான கவனிப்பின் பேரில் எழுபத்தொன்பது தினங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டதாக வீடமைப்பு அமைச்சர் முசமட்டியாப் ஆளும் பாத்கட்சியின் உத்தியோகபூர்வ இசமுக்கு அனுப்பிய தந்திச் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திக்றிஸ் நதியின் தெற்குக் கரையில் அமைக்கப்பட்டுள்ள இம்மாளிகை மக்களின் இல்லம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மாளிகை இவ்வளவு விரைவில் மீண்டும் கட்டப்பட்டிருப்பது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதாகவும். எதிரிகளுக்கு எச்சரிக்கையாகியிருப்பதாகவும் பத்திரிகைகள் வர்ணித்துள்ளன.

## 4 குர்திஷ் அரசியல்வாதிகள் ஜேர்மனியில் சுட்டுக் கொலை

**-ஈரானியர் கொன்றதாக குற்றச் சாட்டு**

(பேர்லின்)

ஜேர்மனியில் நடைபெறும் சர்வதேச சோஷலிஸ்ட் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்தநான்குகுர்திஷ்அரசியல்வாதிகளை துப்பாக்கியுடன் வந்தஇனந்தெரியாதோர் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று ஜேர்மன் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்கு பெர்லினிலுள்ள கிரேக்க உணவு விடுதி ஒன்றில் இச் சம்பவம் இடம் பெற்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## கடும் கண்காணிப்புக்கு மத்தியிலும் தமிழகத்தில் தீவிரவாதிகள் ஊடுருவல்

**– வால்டர் தேவாரம்**

தமிழகத்தில் காவல் துறையின் கடுமையான கண்காணிப்பையும் மீறி இலங்கைத் தீவிரவாதிகள் அல்லது அவர்களிடம்பயிற்சி பெற்றவர்கள் இன்னும் தமிழகத்தில் அவர்களது ஆதரவாளர்களுடைய ஒத்துழைப்பால் இருக்கிறார்கள என்பதையே மதுரை அருகே சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் எடுத்துக் காட்டுவதாக தமிழக காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் டபிள்யூ. ஐ தேவாரம்கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர் மத்தியில்பேசியபோதே தேவாரம் இதனைத் தெரிவித்தார். அதேசமயம் காவல் துறைக் கண்காணிப்பில் தொய்வு எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மதுரை அருகே கூடல்நகரில் சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி இலங்கைத் தீவிரவாதி என சந்தேகிக்கப்படும் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து தேவாரம் நேற்று முன்தினம் மதுரைக்குச் சென்றார்.

தமிழக காவல்துறை தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதில் இப்போது மேலும் உறுதி பூண்டிருப்பதாக அவர் உறுதி கூறினார்.

சப் இன்ஸ்பெக்டரைச் சுட்டுக் கொன்ற நபர் ஆயுதப் பயிற்சி பெற்ற இலங்கையைச் சேர்ந்தவராகவோ அல்லது இந்தியாவைச் சேர்ந்தவராகவோ இருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சப்இன்ஸ்பெக்டரைச் சுட்ட துப்பாக்கி ஜேர்மன் நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி என்றும், இதில் இருந்த 12 குண்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

இந்தக்கொலையைச்செய்த நபர் யார் என்பது இன்னமும் கண்டறியப்படவில்லை என்றும்,

சம்பந்தப்பட்ட தீவிரவாதி பயணம் செய்த 'ஆட்டோ' ஓட்டுநர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஜெயலலிதா ஆட்சியை கவிழ்க்க சுவாமி சபதம்

ஜனதா தளத்தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்க்க சபதம் பூண்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சர் ஜெயலலிதாவால்தான் தமிழ் நாட்டுக்கு விமோசனம் என்று கூறி அதற்காகப் பாடுபட்ட அவருக்கு ஓராண்டுக்குள் ஜெயலலிதா ஆட்சி மீது அளவு கடந்த வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

ஜெயலலிதாவை இனியும் விட்டுவைத்தால் தமிழ் நாடு தாங்காது என்றும் ஒக்டோபர் 2 ஆம் திகதிக்குப் பிறகு தமிழ் நாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அரசை எதிர்த்து பிரசாரம் செய்யப்போவதாகவும் அவர்இப்போதுபிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்.

இப்படிப் பிரசாரம் செய்வதால் ஜெயலலிதாவின் ஆட்சியை கவிழ்க்க முடியுமா? என்றுகேட்டதற்கு, ''ஜெயலலிதாவைப் பற்றி எனக்குத் தெரியாதா? தனக்கு எதிர்ப்பு வருகிறது என்றால் ஓசைப் படாமல் பதவியை விட்டு ஓடி விடுவார்'' என்று பதில் அளித்தார்.

தமிழகத்தில் ஒரு மூன்றாவது அணியை உருவாக்கப் போவதாகவும்,அந்த் அணியை உருவாக்க ஆறு அல்லது ஏழு பேர் கொண்ட நடவடிக்கைக் குழு ஒன்று அமைக்கப்படவிருப்பதாகவும், ஜெயலலிதா இல்லாத அ.தி.மு.க.வினரையும் கருணாநிதி இல்லாத தி.மு.க.வினரையும் மரியாதையை விரும்பும் காங்கிரசாரையும் சேர்த்து இந்த அணியை உருவாக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

### ஆந்திராவில் நெருக்கடி

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில், காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு இடையே ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தணிப்பதற்காக காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பிரதமருமான பி.வி. நரசிம்மராவ், விசேட தூதுவராக ஜி. கே. மூப்பனாரை ஹைதராபாத்திற்கு அனுப்பியுள்ளார்.நேற்று முன்தினம் இரவு ஹைதராபாத்திற்கு வந்த மூப்பனார் முதல்வர் ஜனார்தன் ரெட்டியிடம் பிரதமரின் விசேட செய்தி ஒன்றை நேரில் கையளித்து நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஈழநாதம்

# கோடி கோடியாக கொள்ளை; அ. தி. மு. க. மீது மூப்பனார் பாய்ச்சல்

(சென்னை)

தமிழகத்தில் அ. தி. மு. க. வினர் கோடி கோடியாக கொள்ளை அடிக்கிறார்கள். முன்பு லட்சக் கணக்கில் பணம் சேர்த்தார்கள் இப்போது கோடி கோடியாகக் குவிக்கிறார்கள் என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான கறுப்பையா மூப்பனார் தெரிவித்துள்ளார்.

பம்பாய் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்

தமிழ் நாட்டில் கட்சியை சீரமைக்க மேலிடம் எனக்கு முழு சுதந்தரம் அளித்துள்ளது இதற்காக நான் தேசிய பேரவையை தொடங்கி உள்ளேன். சிதறுண்டு கிடக்கும் காங்கிரசை ஒன்று திரட்டி அவர்கள் ஒரு 'குறிக்கோளுடன் செயல்பட இது ஒரு மேடை போல் பயன்படும் என்றும் அவர் தனது பேட்டியில் தெரிவித்தார்.

அ. தி. மு. க வின் சமீபத்திய நிலை குறித்து தெரிவிக்கும் போது ''அ. தி மு. க. தொடர்ந்து காங்கிரசை ஒதுக்கி வருகிறது. கூட்டுறவு சங்கங்களில் கூட காங்கிரஸ் தொண்டர்களையும் தலைவர்களையும் அ. தி. மு க. புறக்கணித்தது. இவற்றை யெல்லாம் விட ராஜீவ் காந்தி அனுதாப அலை காரணமாக பொதுத் தேர்தலில் அ. தி. மு. க. வெற்றி பெறவில்லை என்று முதல்வர் ஜெயலலிதா கூறியதுதான் காங்கிரஸ் காரர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. இது எங்கள் உணர்வுகளை புணபடுத்தியுள்ளது'' என்றும் தெரிவித்தார்.

சுப்பிரமணியம் சுவாமி விடுதலைப் புலிகள் குறித்து ஜெயலலிதா மீது விடுத்த குற்றச்சாட்டுக் குறித்து தெரிவிக்கையில்; ''இது குறித்த உண்மைகள் தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு தெரியும். ஆகவே இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தவோ, யாரிடமும் கருத்துக் கேட்கவோ தேவையில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

## திலீபன் நினைவாக பல்கலை. உண்ணாவிரதம்

தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கை அரசின் பொருளாதாரத் தடைகளையும், யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதல்களையும், வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் அகதிகளுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்து அநீதிகளையும் எதிர்த்து ஓர் அடையாள உண்ணாவிரதம் நாளைகாலை 8 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை யாழ். பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த உண்ணாவிரதத்தை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து நடாத்தவுள்ளன.


# வெளிவந்துவிட்டது....

கவிஞர்

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

அவர்கள் எழுதிய

தியாகப் பயணத்தில்

திலீபனுடன்

12 நாட்கள்





# தொண்டராசிரியருக்கு நேர்முகப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் இன்று முதல் 27-ம் திகதிவரை கோட்டக் கல்வி அலுவலகங்களில் கோட்டரீதியாக நடைபெறும் எனக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

சாவகச்சேரி கோட்டத்தில் 23-ம் திகதி மாலை 1-30 இற்கும் பருத்தித்துறை கோட்டத்தில் 24-ம் திகதி 8-30 மணிக்கும், பண்டத்தரிப்பு கோட்டத்தில் 25-ம் திகதி 8-30 மணிக்கும், வேலணைக் கோட்டத்தில் 26-ம் திகதி 8-30 இற்கும், யாழ்ப்பாண கோட்டத்தில் 26-ம் திகதி 11-00 மணிக்கும், மருதனார் மடக் கோட்டத்தில் 27-ம் திகதி 8-30 இற்கும் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவோர் பிறப்பு அத்தாட்சி பத்திரம் கிராமசேவை உத்தியோகத்தரின் அத்தாட்சிப்பத்திரம், (உதவி அரச அதிபரின் அத்தாட்சிப்படுத்தலுடன்) தொண்டர் ஆசிரியராக நியமிக்கப்பட்ட திணைக்கள அனுமதிக் கடிதங்கள், தற்பொழுதும் தொடர்ந்து கடமையாற்றுதல் தொடர்பான அதிபரின் உறுதியுரை ஆகியவற்றின் மூலப்பிரதிகளையும்கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் க. பொ. த உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சை சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் புகைப்படப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் எனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிட்ட தினங்களில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றமுடியாதவர்களுக்கு 29-ம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் எனவும் இதற்கும் சமுகமளிக்கத்தவறின் குறிப்பிட்ட தினத்தில் நியமனக்கடிதம் வழங்கப்பட மாட்டாது எனவும் கோட்டப்பிரதிக்கல்விப் பணிப்பாளர்களின் விதப்புரைகளின் அடிப்படையில் முன்னர் கோட்டரீதியாக பெயர் வெளியிடப்பட்டவர்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும்என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

### இராணுவ

ணுவ புலனாய்வுப் பிரிவு நிலையப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

நடராசா செல்வநாதன் (28 வயது), கதிர்வேல் தம்பையா (35 வயது) ஆகிய இரு குடும்பஸ்தர்களுமே சில தினங்களுக்கு முன்னர் கைதானார்கள். இவர்களின் தற்போதைய நிலை பற்றி அறியப்படவில்லை. (தி)

### மனித

அனுப்பப்பட்டுள்ளது.

ஐ.நா சபையில், சிறிலங்காவில மனித உரிமைகள் மீறல் தொடர்பான பிரச்சினையை எழுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என்று கூறப்படுகிறது.

### குழந்தைகளை

### ராம்தாஸ்

மாநிலத்தில் சில இடங்களில் வன்செயல்கள் தலைதூக்கியுள்ளன.

வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு எம். ஜி ஆர் ஆகிய மாவட்டங்களில் வன்முறைகள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாகத் தாக்குதல்களுக்கு பஸ்களே இலக்காகியுள்ளன. விழுப்புரத்தில் பஸ் ஒன்று கொளுத்தப்பட்டது. கடைகள் தாக்கப்பட்டன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மர்மமான

விடுவிக்கப்படுகின்றனர்.

இப்படியான இரகசியமான முகாம்கள் உள்ளதாக சந்தேகிக்கப்படும் இடங்களை கண்டறிந்து தகவல் சேகரிக்க முயன்று வருவதாகவும் இதன் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்படும் எனவும் மேற்படி அமைப்பின் செயலாளர் சந்திரா பீரிஸ் தெரிவித்ததாக 'லங்கா தீப' வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இம் முகாம்கள் பற்றிய விபரங்களை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை யெடுக்கப்படும். அக்டோபர் ஐந்தாம்திகதி இங்கு வரவுள்ள மனித உரிமைகள் அமைப்பின் தூதுக்குழுவினருக்கு இது வரை கிடைத்த விபரங்கள் தெரியப்படுத்தப்படும் எனவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தியாகி திலீபன்

அத்துடன் பல்வேறு இடங்களில் சிரமதான நிகழ்ச்சிகளும் நேற்று நடைபெற்றன

கோப்பாய் வட்டப் பிரிவில் நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள உண்ணாவிரதபந்தலில்

களுத்துறை சிறையில்

# தடுத்துவைக்கப்பட்டுள்ள 88 பேரின் விபரம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைகளினாலும் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டுத் தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் கடுத்து வைக்கப்பட்டிருக்கும் 88 இளைஞர்களது பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன. அவர்களது விபரங்கள் வருமாறு:

| பெயர் | விலாசம் | தகவல் தெரிவிக்கப் படவேண்டியவர் |
|---|---|---|
| அ. அற்புதராஜ் | பருத்தித்துறை | மா அருணாசலம் |
| யா. அன்ரன் சாள்ஸ் | மாதகல் | ம யாகப்பா |
| சி. அமிர்தலிங்கம் | வல்வெட்டித்துறை | ஞான லர் |
| கு. ஆறுமுகம் | வல்வெட்டித்துறை | அ. சிவகணேஸ் |
| தி. அன்பழகம் | மயிலிட்டி | திருவெங்கடாசலம் |
| யே. அருள்தாஸ் | அல்வாய் | விஜயகுமாரி |
| க. அந்தோனிப் பிள்ளை | பலாலி வடக்கு | மேரி அல்மேடா |
| பா. அன்ரன் | கொழும்புத்துறை | அ வசந்தி |
| பி. அருந்தவராசா | பொலிகண்டி | பிலோமிநாதர் |
| கா. அருமத்துரை | வல்வெட்டி | அ. நிரஞ்சலாதேவி |
| கி. அரியரத்தினம்பாபு | இளவாலை | கொ. தங்கராசா |
| ம. அன்ரன் | குருநகர் | அ. இமக்குலேசு |
| வி. அருணாசலம் | குருநகர் | வசந்தா |
| க. இராசேந்திரம் | வல்வெட்டிதுறை | இ விஜயராணி |
| ச. இந்திரலிங்கம் | பருத்தித்துறை | இ சரோஜாதேவி |
| இ. இராசன் | நயினாதீவு | இ யோகேஸ்வரி |
| பி, இஸ்தோப்பர் | இளவாலை | கி. லூந்துராணி |
| ந. உத்தமசீலன் | தொண்டமனாறு | புஸ்பராஜேஸ்வரி |
| பொ. கண்ணதாசன் | வல்வெட்டிதுறை | பொன்னம்பலம் |
| வே. கணேசலிங்கம் | கொடிகாமம் | நடராசா |
| வி. குலசிங்கம் | பருத்தித்துறை | கு. சாந்தகுமாரி |
| வ குணபாலசிங்கம் | நாகர்கோயில் | கு. விஜயலட்சுமி |
| கு. குணசேகரம் | கம்பர்மலை | கு சிங்காரச்செல்வி |
| மு. குமாரராயி | பருத்தித்துறை | செபமாலை அரசி |
| வே குவீந்திரன் | தாளையடி | வே. செல்லப்பாக்கியம் |
| க குலவீரசிங்கம் | பொலிகண்டி | ச. கந்தசாமி |
| லி. ஜொன்சன் ரைன் | யாழ்ப்பாணம் | ஜூஸ்மிலா |
| த சிவகுமார் | வல்வெட்டிதுறை | சி. தவராசா |
| த. சண்முகராசா | வல்வெட்டிதுறை | க தங்கராசா |
| வே சந்திரலிங்கம் | தாளையடி | செல்லப்பாக்கியம் |
| வ. சின்னத்துரை | வெற்றிலைக்கேணி | சி. வடிவேலு |
| இ. சிறீதரன் | அல்வாய் | இ. நாகம்மா |
| சு. சற்குணராசா | பருத்தித்துறை | சு நாகரத்தினம் |
| சீ. சந்திரன் | செம்பியன்பற்று | அன்னபூரணம் |
| க சுப்பிரமணியம் | செம்பியன்பற்று | சு கலாதேவி |
| இ. சூசை | குருநகர் | விஜயலட்சுமி |
| ரா செல்வராசா | மல்லாகம் | செ. யோகமலர் |
| இ சுப்பிரமணியம் | தொண்டமனாறு | சு சந்திரமலர் |
| பொ. சிவபாலன் | தாளையடி | மு சிற்றம்பலம் |
| லி. ஜோன்சன் | யாழ்ப்பாணம் | ஜோ சுமிதா |
| பா. ஞானசீலன் | பொலிகண்டி | பா. செல்வராணி |
| ஞ ஞானசேகரம் | தாளையடி | ஞா. ஜெபராணி |
| செ துரைரத்தினம் | நாகர்கோயில் | து. இந்திராணி |
| தெ. திருஞானமூர்த்தி | தாளையடி | தெ. தங்கமலர் |
| செ தாசுடீன் | குருநகர் | மேரி லொறிற்றா |
| ப நிக்சன் | குருநகர் | மிக்கேல் மாகிரேட் |
| க. நவரத்தினம் | தாளையடி | ஜெகசோதி |
| இ. நேசராசா | இளவாலை | மேரிகிளாரேற்றா |
| பி. சென் நிக்லஸ் | இளவாலை | நி. சற்குணேஸ்வரி |
| க. பத்மநாதன் | வல்வெட்டிதுறை | தங்கரூபி |
| ரா. பிராங்கிளின் | அல்வாய் | தி ராசரத்தினம் |
| அ. பாக்கியராசா | மணியம்தோட்டம் | யசீந்தா பா. |
| ம பொன்னுத்துரை | பருத்தித்துறை | பொ.விஜயகுமாரி |
| செ. செல்வமனோகரன் | பொலிகண்டி | செ. அனுசா |
| பி. டேவிட ஜீவராஜ் | அல்வாய் மேற்கு | மேரி மெற்றலின் |
| சி. நிமல்குமார் | வல்வெட்டி | நி.ரஞ்சினிதேவி |
| ஏ. பிரான்சிஸ் | பாஷையூர் | பி.மாலினி |
| க. பிரேமதாஸ் | வல்வெட்டிதுறை | க. ராகரத்தினம் |
| சே மகுரானந்தன் | குருநகர் | சே. லோறன்சியா |

வெளிவந்துவிட்டது....

கவிஞர்

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

அவர்கள் எழுதிய


தியாகப் பயணத்தில்

**திலீபனுடன்**

**12 நாட்கள்**

பிரதி ஒன்றின் விலை

**ரூபா. 50/-**




திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய



**புதிய சர்வதேச ஒழுங்கின் கீழ்**

**இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை**

பிரதி ஒன்றின் விலை

**ரூபா 20/-**

**குறைந்த விலை! நிறைந்த சேவை!**

கவிதை, நாவல், இலக்கியம், அரசியல்
அனைத்து நூல்களும் பெற அரிய இடம்!
பாடசாலை உபகரணங்களுக்கும்
பாடசாலை நூல்களுக்கும் சிறந்த ஒரே இடம்

# "தமிழ்த்தாய் புத்தகசாலை"

191, மின்சாரநிலைய வீதி,
[பஸ்நிலைய அருகாமை]
யாழ்ப்பாணம்.

(சி-5093)


னுவ புலனாய்வுப் பிரிவு நிலையப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

நடராசா செல்வநாதன் (28 வயது), கதிர்வேல் தம்பையா (35 வயது) ஆகிய இரு குடும்பஸ்தர்களுமே சில தினங்களுக்கு முன்னர் கைதானார்கள். இவர்களின் தற்போதைய நிலை பற்றி அறியப்படவில்லை. (தி)

## மனித

அனுப்பப்பட்டுள்ளது.

ஐ.நா சபையில், சிறிலங்காவில மனித உரிமைகள் மீறல் தொடர்பான பிரச்சினையை எழுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என்று கூறப்படுகிறது.

## குழந்தைகளை

மூலம் உட்செல்லும் இக்கிருமிகள் சுவாசத் தொகுதியைத் தாக்குகின்றன என்றும், நரம்பு மண்டலத்தைச் செயலிழக்கச் செய்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முழு நரம்பு மண்டலமும் தாக்கப்பட்டு அவை செயலிழப்பதனாலேயே அங்கங்கள் செயலிழந்து போகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது

அதேசமயம் கிருமித் தொற்றுள்ள பழுதடைந்த உணவுகளும் விசேடமாக இறைச்சி, ஐஸ்கிறீம் என்பனவும் இதற்கான காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது

இந்நோய்க்கான சிகிச்சை முறை எதுவும் இதுவரை அறியப்படவில்லை எனவும், நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு செயற்கை சுவாசம் மட்டும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இம் முகாம்கள் பற்றிய விபரங்களை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை யெடுக்கப்படும். அக்டோபர் ஐந்தாம்திகதி இங்கு வரவுள்ள மனித உரிமைகள் அமைப்பின் தூதுக்குழுவினருக்கு இதுவரை கிடைத்த விபரங்கள் தெரியப்படுத்தப்படும் எனவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தியாகி திலீபன்

அத்துடன் பல்வேறு இடங்களில் சிரமதான நிகழ்ச்சிகளும் நேற்று நடைபெற்றன

கோப்பாய் வட்டப் பிரிவில் நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள உண்ணாவிரதபந்தலில் வசாவிளான் குட்டியப்புலத்தைச் சேர்ந்த திரு- மயில்வாகனம் சந்திரசேகரம் (அப்பன்) என்பவர் கடந்த திங்கள் இரவு 10 00 மணி முதல் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றார். இவரது உண்ணாவிரதம் திலீபன் தியாக மரணமடைந்த 26 ஆம் திகதி பகல் 10 48 மணிக்கு முடிவுறுமென தெரிவிக்கப்படுகிறது (க)

## தியாகி

சங்கானை வட்டப் பிரிவில் சுழிபுரம் மாவடி வீதியிலிருந்து சித்தன்கேணி வீதிவரைதிருத்த வேலை மேற்கொள்ளப்படவுள்ளது

கரவெட்டி வட்டப் பிரிவில் அச்சுவேலி வர்த்தகசங்க ஆதரவில் அச்சுவேலிமக்களால் அச்சுவேலி பஸ் நிலையப் பகுதி சந்தை பகுதி என்பன துப்புரவு செய்யப்படவுள்ளது

| | | |
|---|---|---|
| இ சுப்பிரமணியம் | [illegible] | சு. சந்திரமலர் |
| பொ. சிவபாலன் | தாளையடி | மு சிற்றம்பலம் |
| லி. கோன்சன் | யாழ்ப்பாணம் | கோ சுபிதா |
| பா. ஞானசீலன் | பொலிகண்டி | பா. செல்வராணி |
| ஞ ஞானசேகரம் | தாளையடி | ஞா. ஜெயராணி |
| செ துரைரத்தினம் | நாகர்கோயில் | து. இந்திராணி |
| தெ. திருஞான மூர்த்தி | தாளையடி | தெ. தங்கமலர் |
| செ தாசுடீன் | குருநகர் | மேரி லொறிற்றா |
| ப நிக்சன் | குருநகர் | மிக்கேல் மாகிரேட் |
| க. நவரத்தினம் | தாளையடி | ஜெகசோதி |
| இ. நேசராசா | இளவாலை | மேரிகிளாரேற்றா |
| பி. சென் நிக்லஸ் | இளவாலை | நி. சற்குணேஸ்வரி |
| க. பத்மநாதன் | வல்வெட்டிதுறை | தங்கரூபி |
| ரா. பிராங்கிளின் | அல்வாய் | தி ராசரத்தினம் |
| அ. பாக்கியராசா | மணியம்தோட்டம் | யசிந்தா பா. |
| ம பொன்னுத்துரை | பருத்தித்துறை | பொ.விஜயகுமாரி |
| செ. செல்வ மனோகரன் | பொலிகண்டி | செ. அனுசா |
| பி. டேவிட ஜீவராஜ் | அல்வாய் மேற்கு | மேரி மெற்றலின் |
| சி. நிமல்குமார் | வல்வெட்டி | நி.ரஞ்சினி தேவி |
| ஏ. பிரான்சிஸ் | பாஷையூர் | பி.மாலினி |
| க. பிரேமதாஸ் | வல்வெட்டிதுறை | க. ராகரத்தினம் |
| சே மகுரானந்தன் | குருநகர் | சே. லோறன்சியா |
| வே மதிவண்ணம் | வல்வெட்டி | ம விஜீதா |
| ப மனோகரசெல்வம் | காங்கேசன்துறை | பரலோகசிங்கம் |
| அ. மனோகரன் | இளவாலை | அ. லூர்துமேரி |
| பே. ஜஸ்மின் | யாழ்ப்பாணம் | ஸ்நாந்தினி |
| அ. லூலிஸ்பாலா | குருநகர் | |
| ரா ஜெயராசா | செம்பியன்பற்று | இ இராசதுரை |
| சூ. யேசுதாசன் | பருத்தித்துறை | யே சாவித்திரி |
| நா ஜெயராசா | ராசாவின்தோட் | அருள்நேஸ்வரி |
| க ரவீநதிரன் | வல்வெட்டித்துறை | மா கணபதி பிள்ளை |
| ம ராசன் | யாழ்ப்பாணம் | கி மக்கிமன் |
| ந ராஜேஸ்வரன் | கெருடாவில் | குணலட்சுமி |
| ஞா.லொ ஜெசீலன் | மாதகல் | செ ஞானப்பிரகாசம் |
| அ வின்சன் | தம்பசிட்டி | வி. சாரதாதேவி |
| வின்சன்டி போல் விக்ரர் | குருநகர் | சலேற்றம்மா |
| ஆ. மரியசீலன் | இளவாலை | ஆசீர்வாதம் |
| இ யோகராசா | அல்வாய் மேற்கு | கமலினிதேவி |
| செ. லூபன் (எடிம்பரோ) | குருநகர் | செ. செல்வராணி |

## வெளிமாவட்டம்:-

| | | |
|---|---|---|
| இ. கிருபாகரன் | பரந்தன் | மு. கந்தசாமி |
| நா. சந்திரசேகரம் | முல்லைத்தீவு | யோசப் அரசரட்ணம் |
| யா. சிந்தா | நாச்சிக்குடா | மரியபூமலர் |
| கி சுகுமாரன் | வவுனியா | கிருஷ்ணபிள்ளை |
| சி. செல்வராசா | பேசாலை | சோலைக்கிளி |
| செ சேகர் | விடத்தல்தீவு | செ. ரவி |
| எம். சோமசுந்தரம் | தலைமன்னார் | பா. கணேசலிங்கம் |
| மு. ஞானசேகரம் | அக்கரைப்பற்று | பரஞ்சோதி |
| சி தங்கராசா | திருமலை | த. கனகபமா |
| தா. மகேஸ்வரன் | ஓமந்தை | ம. பரிமளம் |
| வா ஜீவா | தலைமன்னார் | பிரகாசம்மாள் |
| க. யேசுதாஸன் | தலைமன்னார் | செ. கணபதிப்பிள்ளை |

## மரண அறிவித்தல்

திருமதி
நாகலிங்கம் மீனாட்சிப்பிள்ளை
(கீரிமலை)

அம்பனையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், கருகம்பனை வீதி, கீரிமலையில் வசித்தவருமான திருமதி நாகலிங்கம் மீனாட்சிப்பிள்ளை காலமானார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-09-92)பகல் கொழும்புத்துறை வீதி, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, 54/13 இலக்க இல்லத்தில நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி உருத்திரமூர்த்தி
54/13,
சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை,
கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு. (3266)

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**22-09-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5785

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

40-7583, 26-4450, 24-6243, 22-9005, 24-4747, 27-1380, 26-423, 41-5979, 24-5393, 27-9416, 40-6979, 26-3667, 22-3611, 42-3924, 26-561, 28-1020, 41-1665, 41-1227, 24-6972, 24-1040, 26-1019, 22-6897, 27-6583

வட பகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

24-5145, 27-9105, 40-1714, 26-6026, 40-7207, 26-4792, 26-536, 26-1495, 26-3130, 28 5294, 42-6452, 28-3306, 28-2342, 41-8449, 28-912, 28-4367, 41-9175.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.